https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அழகர் கிள்ளை விடு தூதுவில் அழகர் சிறப்புக்கள்

**முனைவர் ஜெ. அருள் இருதய ஜெயந்தி**
தமிழ்த்துறை
இணைப்பேராசிரியர்
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
பெரியகுளம்

## முன்னுரை

*திருமாலிருஞ்சோலை எனும் மலையில் தங்குகின்ற அழகரிடம் மனத்தைப் பறி கொடுத்த பெண்ணொருத்தி, தன் காதலை அவரிடம் கூறி தனது காதலை அவர் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக மாலையை வாங்கி வருமாறு கிளியைத் தூது விடுப்பதாகப் பாடப்படும் நூல் அழகர் கிள்ளை விடு தூது. 239 கண்ணிகளைக் கொண்ட இந்நூலை பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றியுள்ளார். இந்நூலில் அமையும் பாட்டுடைத் தலைவனான அழகரின் பெருமைகளையும், அவர்தம் தனித்தன்மைகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.*

## ஆய்வுச்சுருக்கம்

*பல அவதாரங்களுக்கு உரிய திருமால் பற்றிப்பல நூல்கள் தோன்றினாலும் காலத்தால் முற்பட்டது அழகர் கிள்ளை விடு தூது எனும் நூல். அந்நூல் அழகர்தம் வீரம், வெற்றி, இறைத்தன்மை ஆகிய சிறப்புக்களை எடுத்தியம்புகிறது.*

## கலைச்சொற்கள்

*அரி, வனவாசம், பூதனை, உந்தி, தசாங்கம்*

## அழகர் சிறப்புக்கள்

*திருமால் அல்லது பெருமாள் என்பவர் வைணவ சமயத்தின் ஸ்ரீ வைஷ்ணவ மரபைப் பின்பற்றுபவர்கள் வணங்கும் கடவுள் ஆவார். சங்க காலத்தில் தமிழர்கள் வணங்கிய மாயோன் என்ற கடவுள் திருமாலைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. சங்க காலத்திற்குப் பிறகு ஆழ்வார்கள் மற்றும் வைணவ ஆச்சாரியர்கள் ஆகியோரால் திருமால் வழிபாடு வளர்ச்சி பெற்றது. இத்திருமாலிற்கு அழகர் எனும் மற்றொரு பெயரும் உண்டு. அவ்அழகரின் சிறப்புக்களை அழகர் விடு தூது நூல் பல்வேறு விதமாகப் பறைசாற்றுகிறது.*

## இரணியனை அழித்தல்

*அழகருக்கு அரி எனும் பெயரும் உண்டு. இவ்அழகர் சிங்க வடிவம் பெற்றுத் தோன்றிய*

பிறகு நரனாகிய மனித வடிவத்தையும் பெற்று நரசிங்கமாக ஒரு பெரிய தூணின் உள்ளிருந்து வெளிப்பட்டவர். அதன் பிறகு கரிய நிறமும், மலை போன்ற அகன்ற தோள்களும் உடைய அசுரனாகிய இரணியன் என்பவனது வலிமை நிறைந்த உடலைத் தரையில் தேய்த்து அழித்து, அவன் போரில் ஈடுபடுத்திய சேனைகளை எமனுக்கு உணவாக்கியவர்.

### அரி அரனாகியவர்

அழகர் முதலில் அரி அதாவது திருமாலாக ஆனவா.; பிறகு அரனாக அதாவது சிவனாகப் பிறந்தவர். அதனால் அவருக்கு அரிஅரன் எனும் பெயரும் உண்டு. சிவனாக வடிவெடுத்து அவனுடைய அழித்தல் தொழிலையும் தானே செய்து, பின்னர் அவ்அழித்தல் தொழிலுக்குப் பகையான தொழிலான புவியைக் காத்தலையும் செய்பவர்.

### கண்ணனாய்த் திருவிளையாடல் புரிபவர்

அழகர் எடுத்த பல அவதாரங்களுள் கண்ண அவதாரமும் ஒன்று. இவ்அவதாரத்தில் அவர் பல சாதனைச் செயல்களைப் புரிந்துள்ளார். **“கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்.”** (சிலம்பு 17:3) என்று சிலம்பு அணி செய்கிறது. அவர் வெண்ணெயும், பூதனை என்ற அரக்கி கொடுத்த பாலும் போதாமல் மேலும் பசி கொண்டு, வேதங்களைப் படைத்த பிரமனைப் பெற்று, அண்ட வெளியெங்கும் விரிந்து பரந்து நிற்பவர். மேலும் மருதமரத்தைச் சாய்த்து வீழ்த்துமாறு நடந்தும் தவழ்ந்தும் விளையாடுபவர். குழந்தைத் தன்மை நீங்காத இயல்புடையவர்.

### காடு கடந்தவர்

அழகர் இராம அவதாரம் எடுத்த போது, முன்வினை காரணமாகவும், பலருக்கு நன்மை பயக்கவும் பல செயல்களைச் செய்தார். அதில் ஒன்று தான் சீதை எனும் பெண்ணுடன் கொடிய காட்டைக் கடந்தது. இராமருடைய வனவாசம் இராவணனை அழித்து, அரக்கர்களின் பிடியில் இருந்து தேவர்களை மீட்டது. இராமர் காடு கடந்ததை, தேவர்களின் துன்பம் கடந்ததற்கு அடையாளமாக்கிக் காட்டுகிறது அழகர் கிள்ளை விடு தூது.

### கடலில் மிதப்பவர்

அழகர் கண்ணனது அவதாரம் முடிவடையும் போது, வேடனொருவன் அம்பு எய்து கொல்லுமாறு தன் மென்மையான காலின் நகங்களை இலக்காகத் தந்த சிறப்புக்குரியவர். ஒவ்வொருவர் உள்ளத்தின் உள்ளும் இருப்பவர். இவ்வுலகிற்கு அப்பாற்பட்டவர். அப்படிப்பட்ட அவர், கடையூழிக் காலத்தில் பிரபஞ்சங்களை அழிக்கும் கடல் நீர்ப்பரப்பின் மேல் ஆலிலையில் மிதந்து கொண்டிருப்பவர். **“பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்”** (பெரும்பாணாற்றுப்படை, பா.அ.373.) என்று பெரும்பாணாற்றுப் படையும் புகழ்கிறது.

### எட்டாத மாயவன்

அழகர் பிரபஞ்சத்தைத் தாண்டியவராக, அனைத்திற்கும் அப்பாற்பட்ட மகானாகக் காட்சியளிக்கிறார். அவர் தெளிவான, வெறுமையான வெட்ட வெளியில் இருந்தாலும், யாருக்கும் புலனாகாதவர். அனைவருக்கும் மிக அருகிலுருப்பினும் அடைய முடியாதவர். அடியவர் மனத்தில் நீங்காது, மாயன் என்னும் பெயருக்கேற்ப மாயம் செய்து மறைந்திருப்பவர். கண்ணன் என்னும் பெயருக்கேற்ப அனைவருக்கும் உறுபொருட்களைக் காட்டுபவர். எண்ணும் போது எங்கும் இல்லாதவன் போலிருந்தாலும் எங்கும் நிறைந்திருப்பவர். எங்கும் நிறைந்திருந்தாலும் எங்கும் இல்லாது மறைந்திருப்பவர். எட்டாத மாயவனானவர்.

### தெய்வமும் உயிரும் தானே ஆனவர்

இறைவனுக்குரிய முக்கியச் சிறப்பு அவரே தெய்வமாகவும், அவரே உயிராகவும் காட்சியளிப்பது. அழகர் இச்சிறப்பிற்கு உரியவராகிறார். அவர், முற்பிறவிகளில் மனிதர் செய்த நல்வினை, தீவினை எனும் இருவினைகளைக் கெடுத்து, ஆணவம் கன்மம் மாயை எனும் பழமைகளை அழித்து, இறைவனை மனிதர் உணருமாறு தனித்து இருக்கச் செய்பவர். உயிர்களை நெருங்கி விதியை எழுதும் பிரமனும், அப்பிரமன் படைத்த நிலைபேறுடைய உயிர்களும், அப்பிரமனையும் உயிர்க

ளையும் ஏவித் தொழில்களை நடத்துபவனும் தான்தான் என்று உணர்த்த, இடையர்கள் முன்பு பசுக்களாகவும், பசுங்கன்றுகளாகவும், அவற்றை மேய்க்கும் இடையனாகவும் தோன்றிய தூய ஒளியானவர். கொடிய நரகமென்னும் பெரும் இருளை நீக்கிடத் தவம் செய்ய வேண்டியதில்லை; உடம்பில் ஆருயிரைச் சேர்க்கப் பிரமன் வேண்டிய தில்லை. நீங்களே பாருங்கள் எனத் துரியோதனர் பாவிகளானாலும் தன் சங்கொலி ஓசை கேட்ட புண்ணியத்தால் மரணத்தின் பின் வீரசுவர்க்கம் அடைந்ததன் மூலமும், தன் குழலிசை கேட்டதனால் பட்டுப்போன மரங்களெல்லாம் தளிர்த்த நிகழ்ச்சியின் மூலமும் சங்கு குழல்களின் ஒலிப் பெருமையைக் காட்டியவர். பொங்கும் அலைமோதும் திருப்பாற்கடலில் அறிதுயில் புரியும் பரம்பொருளான அவர், முன்பு ஒருநாள் முதலை வாயில் சிக்கிய போது தன்னைக் காத்த ஆதிமூலம் இவரே எனச் சான்றளிக்கும் யானையைக் கொண்ட திருமாலானவர். பழமையான உலகினைத் தந்திடுவோனும், அழிப்பவனும் தான்தான் என்று தனது உந்தியில் பிரம்மாவைப் படைக்கச் செய்ததன் மூலமும், வாயினால் கடையூழிக் காலத்தில் அனைத்து உலகங்க ளையும் உண்டு தன்னுள் அடக்கிக் கொண்டதன் மூலமும் தன்னை உணர்த்து பவராகிறார். இவற்றின் மூலம் 'தெய்வமும், உயிரும் தான் ஒருவனே ஆதல்' எனும் கருத்துப் படிவத்திற்குரியவராகிறார் அழகர்.

## ஆழ்வார் உள்ளத்தில் உறைபவர்

ஆழ்வார்கள் தம்முடைய தமிழ்ப் பாசுரங்களால் வைணவசமயக் கடவுளான திருமாலைப் போற்றிப்பாடி மகிழ்ந்தவர்கள். திருமாலின் அடியவர்களான அவர்கள், திருமாலின் பெருமையையும், தமிழின் சிறப்பினையும் உலகிற்கு உணர்த்தியவர்கள். பைந்தமிழ் மொழியில், பழமை பொருந்திய வேதங்கள் நான்கின் மெய்ப் பொருளையும் நாலாயிர திவ்விய பிரபந்தம் எனும் நல்ல கவிகளாகப் பாடி அருளியவர்கள். வடமொழி யில் உள்ள வேதங்களுக்கு இணையாக இவர்களின் பாசுரங்கள் போற்றப்படுகின்றன. பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கை ஆழ்வார், நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிய பதினொரு ஆழ்வார்கள் உள்ளத்திலும் வீற்றிருக்கும் சிறப்புடையவராக அழகர் காணப்படுகிறார். இதனை,

**"ஆதிமறை நான்கையும் நாலாயிரத்து**
**நற்கவியாய்**

**ஓதும் பதினொருவர்**
**உள்ளத்தான்"** (அ.கி.வி.தூ. கண்ணி 87)

எனும் கண்ணி காட்டுகிறது.

## கங்கை தந்தவர்

செந்தாமரை மலரிலிருந்து தேன் பொழிவது போல, உலகமளந்த சமயத்தில் பிரம்மலோக த்தில் இருந்து பிரமன் பூசித்த நீரை தன் பாதத்திலிருந்து கங்கையாக வழியச் செய்த வள்ளலாக அழகர் போற்றப்படுகிறார்.

## அறிதுயில் கொள்பவர்

திருமால் பாற்கடலில் ஆதிசேடன் என்ற பாம்பைப் படுக்கையாகக் கொண்டு பள்ளி கொள்கின்றான். திருமாலின் தூக்கம் அறிதுயில் எனப்படும். இத்தகைய நிலை பெரிய திருமடலில் வருணிக்கப்படுகிறது. திருமால் பள்ளி கொள்ளும் படுக்கையாகிய ஆதிசேடன் ஆயிரம் வாய்களைக் கொண்டது. அதன் படங்களில் உள்ள மணிகள் ஒளி வீசுகின்றன. அப்படுக்கையில் ஒரு மலையைப் போன்று திருமால் பள்ளி கொள்கின்றார். சூரியனும் சந்திரனும் விளக்குகளாக உள்ளன. கடல் அலைகள் விசிறிகளாக அமைகின்றன. அவர் தாமரை மலர் போன்ற பாதங்கள் நில உலகை அளந்தவை. திருமகள் அணிந்துள்ள மாலை நட்சத்திரங்கள் அவளது கூந்தல் மேகங்கள். திருமாலிருஞ்சோலை மலையும் திருவேங்கட மலையும் மார்புகள். இத்தகைய திருமகள் திருமாலின் திருவடிகளைத் தடவ, அவன் பள்ளி கொள்கின்றான். திருமால் பள்ளி கொண்டதை,

"............... ஓர்

**உன்னிய யோகத்து உறக்கம்**

**தலைக் கொண்ட**

பின்னை... (பெரிய திருமடல், பா.அ. 14-17.)

எனும் அடிகளில் பெரிய திருமடல் காட்டுவதைப் போல, அழகர் கிள்ளை விடு தூதுவும்,

**“ஆன்ற உலகம் அறிவும் அறியாமையுமாத்**

**தோன்றத் துயிலாத் துயில்**

**கொள்வோன்”** (அ.கி.வி.தூ. கண்ணி 89)

எனும் கண்ணிகளில் வெளிப்படுத்துகிறது.

### தாய்க்குப் பரம் உணர்த்தியவன்

அழகர் கண்ண அவதாரம் எடுத்த போது, தன்னை ஈன்ற தாயாகிய யசோதைக்குத் தனது அழகிய திருவாயைத் திறந்து காட்டி உலகம் வெளியில் இருப்பது போலவே தனக்குள்ளும் இருக்கிறது எனத் தெளிவாக உணர வைத்தவர். உலகத்தைத் தான் பாதுகாப்பாக வைத்துள்ளதை வெளிப் படுத்தியவர்.

### பிறவித்துயர் களைபவர்

பெருங்கவலைகளைத் தரக்கூடிய பிறவிப் பெருங்கடலில் கலந்துள்ள அஞ்ஞானம் எனும் உப்புச் சுவையை நீக்குவதற்காகக் கடல் நீரை உண்டு தூய மழையாகப் பொழியும் மேகமாக விளங்குபவராக அழகர் அமைகிறார். மனிதர்களின் பிறவியாகிய பெருந்துயரைக் களையும் வள்ளலாகக் காட்சி தருகிறார். மேலும் இறைச்சிக்காக விலங்குகளைப் பிடிக்கும் வேடர்கள் தாம் பொருத்தி வைத்த ஒரு பார்வை விலங்கால் நூறு மான் முதலிய விலங்குகளைப் பிடித்து விடுவது போல், தானே படைத்த எறும்பு முதல் யானை ஈறான எண்பத்தி நான்கு இலட்சம் பிறவிகளையும் தனது பத்து அவதாரங்களால் தீர்த்தருளியவர்.

### பரசமயம் அடக்குவோன்

அழகர் என்பவர் சமயங்களுக்கு அப்பாற் பட்டவர். அனைத்து சமயங்களையும் தன்னுள்ளே அடக்குபவர். அனைத்திற்கும் தலைமையான பரம்பொருளானவர். உயர்வுள்ள, மடங்கி மடங்கித் தாக்கவரும் வைணவத்திற்குப் புறம்பான பிற சமய வாதங்கள் என்னும் நதிகள் வந்து அடங்கும் கருங்கடலானவர்.

### பத்து அங்கங்களை உடையவர்

அழகர் கிள்ளை விடு தூது, தலைவனாகிய அழகரின் தசாங்கங்களைக் கூறிப் புகழ்கிறது. தசாங்கம் என்பது ஒரு சிற்றிலக்கிய வகை ஆகும். தசாங்கம் என்பது தசம்+அங்கம் என்று பிரிந்து பொருள் தரும். தசம் என்றால் பத்து என்று பொருள். அங்கம் என்றால் உறுப்பு என்று பொருள். தலைவனின் பத்து அங்கங்களைப் புகழ்ந்து பாடுவது தசாங்கம் ஆகும். மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, யானை, குதிரை, முரசு, ஆணை, கொடி என்பன பத்து உறுப்புக்கள் ஆகும்.

### எட்டெழுத்தின் சிறப்பிற்குரியவர்

எட்டெழுத்து மந்திரம் என்பது நாராயண மந்திரம் ஆகும். ‘ஓம் நமோ நாராயணா’ என்பது தான் அது. இந்த எட்டு எழுத்துக்களால் சிறுமையுடைய எளிதில் நைந்து அழிந்து போகும் இயல்புடைய, பிரமன் தன் ஐந்து எழுத்துக்களால் எழுதும் அச்சம் தரும் விதியாகிய எழுத்துக்களை ‘இல்லை’ எனும் மூன்றெழுத்துக்களாக மாற்றுபவர் அழகர். அவரது நாமம் தலைவிதியையே மாற்றும் திறம் வாய்ந்தது. மேலும், பிறவி தோறும் தொடர்ந்து வரும் ஊழ்வினையை அடியோடு அறுக்கும் அவரது நாராயணா எனும் திருப்பெயரைச் சிந்தித்து உடலில் திருமண் தரித்துக் கொண்டவர்க்கு இம்மை, மறுமை இன்பங் களைத் தரும் வலிமை அந்நாமத்திற்கு உண்டு. அவ்வளவிற்குச் சிறப்புத் தரும் நாமத்தை உடையவராக அழகர் அமைகிறார்.

### தேவரால் தொழப்படுபவர்

**“திருத்துஞ்சும் திண் காப்பு”**

(பட்டினப்பாலை, பா.எ. 41.)

**“திருநிலைஇய பெரு மன்னையில்”**

(பட்டினப்பாலை பா.எ. 291.)

எனப்படும் அழகர், தேவர்களுக்கெல்லாம் தேவராகத் தொழப்படுபவர். இவர் தலைமை யில் தங்களை இணைத்துக் கொள்ள பிற தேவர்களும் விரும்பும் இடத்தில் இருக்கும் இவர், பிறருடன் நல்ல நட்புக் கொண்டு விளங்குகிறார். குன்று தனது என்றோ,

நண்பரது என்றோ வேற்றுமை பாராட்டும் எண்ணமோ, வஞ்சமோ இல்லாமல் தங்கள் மலைகள் எங்கிருப்பினும் அவற்றை விட்டு சிவசங்கரன் முதலிய தேவர்கள் பலரும் தம்முடைய மலை இதுதான் என்று அழகர் மலையில் தங்கும் கேண்மையுடையவராக அழகர் அமைகிறார்.

### கண்ணளித்தவர்

கண்ணனாக அவதாரமெடுத்த போது தன்னைத் துதித்த ஒரு யானைக் கன்றுக்குக் கண் கொடுத்த அழகர், பச்சை வாரணதாசர் எனும் ஒப்பற்ற வலிமையுள்ள முனிவருக்கு அத்தகிரியில் முதலில் கெடுத்துப் பின் அழகர் மலையில் இரு கண்களையும் கொடுத்தவர். தண்டனை கொடுத்துப் பிறகு அதற்கே சுகம் கொடுக்கும் வள்ளலாக அவர் அமைவதை இங்கு உணரலாம்.

### பணிவுடையவர்

**“மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்”**
(நற்,பா.அ 32:1.)

என்றழைக்கப்படும் அழகர், தேவர்களுக்கெல்லாம் தேவராகவும், தலைவராகவும் அமைந்திருந்தாலும் பணிவு எனும் தாழ்மையுடன் அமைகிறார். பிறருக்கு அஞ்சாமல் விண்ணையும் நிலத்தையும் தனதாகக் கொண்ட பொன்மயமான இலங்கையை வென்றவனான பொழுதும் இவ்வுலகில் மூன்றடி நிலத்தை மாபலி என்பவனிடத்திலிருந்து தம் உள்ளங்கையில் தானமாக வாங்குகிறார். பணிவு உள்ளவனே சிறந்த தலைவனாக முடியும் எனும் கருத்துருவத்தின் முழுவடிவமாக அழகர் போற்றப்படுகிறார்.

### ஒருத்திக்கே மாலையளிப்பவர்

இறைவனாக இருப்பினும் ஆண்கள் அனைவருக்கும் பல பெண்களை மணக்கும் உரிமை உண்டு. ஆனால் இசை ஒலிப்பதும், அழகு நிறைந்ததுமான திருவரங்கத்து அழகர்,ஆண்டாள் நாச்சியாரைத் தவிர, வேறு எப்பெண்ணிற்கும் தனது அழகிய மலர்மாலையை வழங்காதவராக அமைகிறார். ‘ஒருவனுக்கு ஒருத்தி’ எனும் கற்புக் கோட்பாடு கைவரப் பெற்றவராக இருக்கிறார்.

### எளியோர்க்கு அரசளித்தவர்

அழகர் தனது பார்வையில் அனைவரையும் சமமாகப் பார்க்கும் பார்வையாளர். உயர்திணை, அஃறிணை எனும் வேறுபாடு காட்டாமல் அவரவரது தகுதியின் பொருட்டு பதவிகளை அளிக்கிறார். எவ்விடத்திற்குச் செல்வதாயினும், ஓட்டுவோன் திருப்பிச் செலுத்த அவசியமின்றி இறைவன் கருத்தை அறிந்துதானே செல்லுகின்ற, செழுமையுள்ள கருடனுக்குப் பறவைகளின் அரசன் எனும் பதவியை அளிக்கிறார். இராம அவதாரத்தின் போது தன் பாதுகைகளுக்கு அரசாளும் நிலையைத் தருகிறார். ‘சமநிலை அளிப்பு’ எனும் கருத்துருவாக்கத்திற்கான அடையாள மாக அவர் அமைகிறார்.

### உடல் சிறப்பு

வனப்பு என்பது ஒருவரின் உடல் முழுவதிலும் தோன்றும் அழகு. அழகர் அவ்வனப்பிற்கு உரியவராகிறார். அழகர் கிள்ளை விடு தூது அவரது உச்சி முதல் உள்ளங்கால் வரையிலான அழகினை எடுத்தியம்புகிறது, போற்றுகின்றது. அவர், அழகிய அகன்ற இடமுடைய உலகத்தை உண்ட கனி போன்ற வாயை உடையவர். அவ்வுலகங்கள் அனைத்தும் தங்கி இருக்கும் திருவயிற்றை உடையவர். தான் உண்டு இருந்த போது பிரமனை ஈன்ற கொப்பூழை உடையவர். உலகத்தை நெருங்கி அளந்த திருப்பாதங்களை உடையவர். புவியில் விளைந்த பயிர்களைப் போன்ற பசுமை நிறம் கொண்ட மேனியை உடையவர். மனத்தில் நினைத்து பன்றி வடிவில் வந்து இரண்யாட்சன் கடலில் அழுத்திய உலகினைப் பெயர்த்து எடுத்த கொம்பினை உடையவர். கூர்மம் என்னும் ஆமையாக வந்து உலகினைச் சுமந்த சிறப்பினையும், திருமழிசை ஆழ்வார் மணிவண்ணனே நீ கிடக்க வேண்டாம் என்று பாடிய கவிதைக்காக அவர்பின் செல்லப் பாம்புப் பாய்ச் சுருட்டு ஆகிய பாரத்தைச் சுமந்த சிறப்பினையும் உடைய முதுகினை உடையவர். ஒளி பொருந்திய நகைகளை

அணிந்த இளம் பெண்கள், தங்கள் வீட்டுக் கொல்லையில் இருக்கும் பனை மர ஓலைகளைக் குதிரையாக்கி மடல் ஊர்ந்து தங்கள் காதல் விரகத்தை வெளிப்படுத்தும் படி செய்யும் அழகிய தோள்களை உடையவர். கல்லை அகலிகை எனும் பெண்ணாக்கிய மலரனைய கால்களை உடையவர். வானத்துத் தேவர்க்காக அரிய அமுதம் கடைந்த அழகிய கைகளையுடையவர்.

**"மணி நிறமும் ஆனோன்"** (அ.கி.வி.தூ. கண்ணி 92)

**"கொப்பூழான்"** (அ.கி.வி.தூ. கண்ணி 126)

**"இடந்த மருப்பினான் ஏந்து முதுகான்"** (அ.கி.வி.தூ. கண்ணி 128)

**"மலர்க்காலினான்"** (அ.கி.வி.தூ. கண்ணி 72)

**"ஆரமுது கடைந்த அங்கையான்"** (அ.கி.வி.தூ. கண்ணி 73)

எனும் அழகர் கிள்ளை விடு தூது நூல் போற்றுவதற்கு ஏற்ப,

**"சுந்தரத் தோளனே!"** (நாலாயிர திவ்ய பிரபந்தம், பா.எ. 49.)

**"தடக்கையன்"** (நாலாயிர திவ்ய பிரபந்தம், பா.எ. 59.)

**"தண்ணந் தாமரைக் கண்ணனே!"** (நாலாயிர திவ்ய பிரபந்தம், பா.எ. 713.)

**"கதிர் திகிரியான் மறைத்த கடல் லண்ணன்"** (சிலப்பதிகாரம், பா.அ. 17:1.) என்று பிற இலக்கியங்களும் புகழ்வது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

## அழகர் கைக்கொண்டுள்ள பொருட்கள்

அழகான உடல் வனப்புப்பெற்ற அழகர், அழகான பொருட்களையும் தன்னகத்தே கொண்டுள்ளார். சிவந்த கதிரவனும், வெண்ணிலவும் போன்ற இரண்டு சங்கு சக்கரங்களையும், மனத்தில் நினைந்து பன்றி வடிவில் வந்து இரண்யாட்சன் கடலில் அழுத்திய உலகினைப் பெயர்த்து எடுத்த கொம்பினை உடையவர். இவரது கைகளில் இருப்பதாலேயே இப்பொருட்கள் இன்றும் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

## வழிபட்டவர்களுக்கு அருள் செய்பவர்

தம்மை நாடி வந்து, வழிபட்டவர்களைக் காப்பாற்றிக் கருணையுடன் கண்ணோக்குவது இறைமையின் குணம். அழகர், பலவித வடிவங்களில் தாங்கள் விரும்பிய தெய்வங்களை மனிதர்கள் துதித்த புண்ணிய மனைத்தும் வடிவம் எடுத்து அழகர் மலைக்கு வந்து தன்னைப் பூசிப்பதற்கு நின்றவர். அவ்வாறு நின்று பக்தர்களின் கண் அசைய, தன்னுடைய திருவடித் தாமரை களைத் துதித்த மலையத்துவச பாண்டியனின் பாவமாகிய மாசுக்களை அழித்தவர். தன் குடிமக்களுக்குப் பழுதற்ற பாதுகாப்பாக விளங்கும் தோள்களுடைய அம்பரீசன் எனும் அரசனுக்குச் சரணாகதி அடையத் தன் பாதமாகிய தாமரைகளை அளித்தவர்.

## தீர்வுகள்

* வீரம், ஆற்றல், சாகசம், வலிமை போன்ற பண்புகள் கொண்ட அழகர் தனிப்பெரும் நாயகனாக அமைகிறார்.
* வெற்றிச் சிறப்புகளை தன்னகத்தே கொண்ட அவர் பெண்களின் மனத்தைக் கவரும் தன்மையாளனாகிறார்.

## துணைநூற்பட்டியல்

1. உ.வே.சா.பதிப்பு (உ.ஆ), இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் (மூலமும் அரும்பத உரையும்) டாக்டர் உ.வே.சா.நூல் நிலையம், சென்னை,
2. கதிர் முருகு, சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
3. சிதம்பரனார், பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை, அன்னை அஞ்சுகம் பதிப்பகம், சென்னை, 2006.
4. திருவேங்கட இராமானுஜதாசன்.த (உ.ஆ) நாலாயிர திவ்வியப் பிரபந்தம் மூலமும் உரையும் மூன்றாம் ஆயிரம், உமா பதிப்பகம் சென்னை.,; 2010.
5. பாலசுப்பிரமணியன்.கு.வெ (உ.ஆ) நற்றிணை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2014.